பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை 27.07.2025 கதிர் 260

### இது ரகசியம் அல்ல!

கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பதவி நீக்குவது தொடர்பான விவாதமும் ☞ 2

# 100ஐ எட்டியது செம்மணியில் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை









யாழ்ப்பாணம் செம்மணியிலுள்ள இரண்டு மனிதப் புதைகுழிகளில்இருந்துநேற்று11மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம்காணப்பட்டுள்ளன. அவற்றுடன்மொத்தம்101மனித எலும்புஎச்சங்கள்இதுவரையில் அடையாளம்காணப்பட்டுள்ளன.

அரியாலை, சிந்துப்பாத்தி மயானத்தில் இடம்பெற்று ☞ 2

## சீனர்கள் இருவர் கைது

இரத்தினபுரிகஹவத்தை மற்றும் திரிவனகெட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இருவேறு விசேட சுற்றிவளைப்புகளில் சீன நாட்டவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் போலி யுவான் நாணயத் ☞ 2

## வரிக் குறைப்புத் தொடர்பில் அநுர அமெரிக்கப் பிரதிநிதியுடன் பேச்சு

இலங்கை ஏற்றுமதிக்கு அமெரிக்கா விதித்துள்ள தீர்வை வரிகளை குறைப்பது தொடர்பில் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவிற்கும் அமெரிக்காவின் வர்த்தக முகவர் அலுவலகத்தின் தூதுவர் ஜேமிசன் கிரியருக்கும் இடையிலான இணையவழி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள ☞ 2

## இலங்கையில் தற்போது முதலீட்டுக்கு உகந்த சூழல்

### முதலிட வாருங்கள் என்கிறார் அமைச்சர் ஹேரத்

இலங்கையில் தற்போது முதலீட்டுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று எமது முதலீட்டு சபை இந்த வருடம் பெருமளவிலான முதலீட்டாளர்களை அழைத்து வந்துள்ளது. எனவே அச்சமின்றி எமது நாட்டிற்கு வந்து முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களுக்கு நாம் பகிரங்க அழைப்பு விடுக்கிறோம் என அயலுறவுத்துறை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை வர்த்தக கவுன்ஸிலின் உலகளாவிய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கொழும்பு ஷாங்க்ரிலா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் விஜித்த

எமது நாட்டை சர்வதேச நாடுகளுக்கு முன்பாக அழகானதும் வளமான நாடாகவும் மாற்ற வேண்டும். இந்த சவாலை வெற்றிக்கொள்ள அரசினால் மாத்திரம் முடியாது.

இதற்கு வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். நாம் அனைவரும் ☞ 2

## வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களிலும் சர்வதேச நீதி கோரி நேற்று போராட்டம்

### கொழும்பில் ஐ.நா. அலுவலகம் முன்பும் கவனவீர்ப்பு

எமக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்புக்கு சர்வதேச சுதந்திரமான நீதிவிசாரணை வேண்டும். இலங்கையின் எந்தவொரு உள்ளகப் பொறிமுறைகளாலும் எமக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பதை வெளிப்படுத்தி வடக்கு,கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் மற்றும் கொழும்பில் பாதிக்கப்பட்ட மக்கள் அணிதிரண்டு கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் 'தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதி வேண்டும்' எனும் தொனிப்பொருளில் நேற்றையதினம் காலை 10 மணிக்கு முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டங்களில் அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள், சர்வதேச நீதியே எமக்கு வேண்டும், செம்மணி இனப்படுகொலையின் அடையாளம், காணாமலாக்கப்பட்ட உறவுகள் எங்கே, சுதந்திரமான வாழ்க்கை எப்போது, இனப்பிரச்சினைக்கு தீர்வு எங்கே? உள்ளிட்ட வாசனங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததோடு கோசங்களையும் எழுப்பினார்கள். அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச சமூகத்துக்கு அனுப்பி வைப்பதற்கான மனுவில் கையொப்பமிடும் ☞ 6

### இனஅழிப்புக்கு நீதியை நிலைநாட்ட

## உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கையில்லை சர்வதேச நீதிப்பொறிமுறை மட்டுமே வேண்டும்

### ஐ.நா. மனித உரிமைகள் உயராணையருக்கு மனு

சர்வதேச சுதந்திர நீதிப்பொறிமுறை ஊடாகவே வடக்கு,கிழக்கில் நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கான நீதியை நிலைநாட்ட முடியும் என்பதை வலியுறுத்தியும் இலங்கை ஆளும்தரப்பின் உள்ளக் பொறிமுறையில் நம்பிக்கையில்லை எனச் சுட்டிக்காட்டியும் மனு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உயராணையர் வோல்கர் டேர்க் உட்பட சர்வதேச சமூகத்துக்கு அனுப்பி ☞ 2

## கடன்மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது பிரான்ஸ் நாடு

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் முக்கிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், இலங்கை மற்றும் பிரான்ஸ் அரசுகள் தங்கள் இருதரப்பு கடன் ஒப்பந்தம் தொடர்பான அமுலாக்கக் கடிதங்களில் உத்தியோகபூர்வமாகக் கையெழுத்திட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக, நாட்டின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்காக இலங்கைக்கும் உத்தியோகபூர்வமான கடன் வழங்குநர் குழுவிற்கும் இடையே கடந்த 20224ஆம் ஆண்டு ஜூன் 26 அன்று கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு ஒப்பந்தம் கடந்த ஜூன் 16ஆம் திகதி அன்று கையெழுத்தானது.

இப்பின்னணியிலேயே இலங்கையின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கும், பிரான்ஸ் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட பிரான்ஸஸ் அபிவிருத்தி முகவரகம், பிபேபிரான்ஸ் அசுரன்ஸ் எக்போர்ட், பாங் டி பிரான்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கும் இடையில் அமுலாக்க ஒப்பந்தம்

## தமிழ் அரசுக் கட்சி ஒருபோதும் உள்ளக விசாரணை கோரவில்லை

### அதன் தலைவர் சிவஞானம் தெரிவிப்பு

தங்களது தரப்பு உள்ளக விசாரணையைக் கோரவில்லை என்றும் போர் குற்றங்கள் தொடர்பாகவும் இனப்படுகொலை தொடர்பாகவும்அரசுத்தலைவர்யிடம் சுட்டிக்காட்டிஉள்ளதாகவும்இலங்கை தமிழ்அரசுக்கட்சியின்பதில்தலைவர் சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

செம்மணி தொடர்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவர் க்கு அனுப்பிய கடிதத்தைநாடாளுமன்றஉறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விமர்சித்தமைதொடர்பில்இதன்போது சி.வி.கே.சிவஞானம் ☞ 2

## இனி இது .....

வாக்கெடுப்பும் ஒகஸ்ட் 5 நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது. அவருக்கு எதிரான விசாரணைகளை நடத்திய உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான குழுவின் அறிக்கையில் தேசபந்து குற்றவாளி என்று என்று கூறப்பட்டதை அடுத்து, இந்த வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

வாக்கெடுப்பில் தேசபந்துவை பதவி நீக்கும் தீர்மானம் நிறைவேறினால் அவரை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க பதவி நீக்கம் செய்வார். இந்த வாக்கெடுப்பு ஒகஸ்ட் 5 நடக்கும்போது ஆளும்தரப்பு அதில் வெற்றிபெறும் என்பது தெரிந்ததே. தீர்மானத்தை நிறைவேற்ற அதற்கு ஆதரவாக 113 வாக்குகள் இருந்தால் போதுமானது. ஆனால் ஆளும்தரப்பிடம் 159 வாக்குகள் இ-ருக்கின்றன. அதனால் சந்தேகத்திற்கு இடமின்றி இந்தத் தீர்மானம் நிறைவேறும்.

அதேசேமயம், ஆளும்தரப்பின் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பதற்கு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக இருந்தபோது செயற்பட்ட விதம் குறித்துக் கடும் அதிருப்தி இருப்பதால் அவரைப் பதவி நீக்குவதற்குத் தமது கட்;சி முழுமையாக ஆதரவளிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர். தமிழ், முஸ்லிம் கட்சிகள் இந்த விடயத்தில் என்ன முடிவெடுக்கும் என்பது இன்னமும் தெரியவில்லை. ஆனால், மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன தீர்மானத்தை நிச்சயம் எதிர்க்கும் என்று தெரிகிறது.

....................................

கல்கிரியகம, மகுலுகஸ்வெவ ஹீனுக்கல வனப்பகுதியில் நால்வர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் இருவர் பொலிஸ் சர்ஜென்ட்டுக்கள். ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரையும் அவர்களை விளக்கமறியலில் வைக்க தம்புள்ளை நீதிவான் துலாஞ்சலி உத்தரவிட்டுள்ளார்.

கர்ப்பிணியானமானைச்சுட்டுக்கொன்றனர் என்று இந்தப் பொலிஸ் சர்ஜென்ட்டுக்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

மடடுகம பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் சார்ஜென்ட் 48455 தில்ஷான், கிரனேகமபொலிஸ்நிலையத்தில்பணியாற்றும் சார்ஜென்ட் 60221 திசாநாயக்க ஆகிய இருவருமே கைது செய்யப்பட்ட பொலிஸார். இவர்களுடன்ரும்காமன்பிரசன்னவிஜேசிங்க மற்றும் சன்ன சரஞ்சன் ஆகியவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்களப் பகுதிகளில் மானைச் சுட்டதற்கு பொலிஸாரைக் கைது செய்கிறார்கள், ஆனால் வடக்கில்பச்சிளங்குழந்தைகளையும்கொன்று புதைத்தவர்களைக் கைது செய்வதற்குத்தான் முடியாமல் இருக்கின்றது. இலங்கையின் நீதி இப்படித்தான் இருக்கின்றது. ..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## 100ஐ எட்டியது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் அகழ்வுப் பணிகளின் இரண்டாம் கட்டத்தின் இரணடாவது பகுதி ஜூலை 21 முதல் கடந்த 6 நாட்களாக இடம்பெற்று வருகின்றது. இந்த இரண்டாவது பகுதியில் அதிகளவு எலும்புக்கூடுகள் மிக வேகமாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த 6 நாள்களில் மட்டும் அகழ்வு பணியில், 36 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 25 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல '01' மற்றும் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல '02' என்றுநீதிமன்றினால்அடையாளப்படுத்தப்பட்ட மனிதபுதைகுழிகள்இரண்டிலும்இப்போதுஒரே நேரத்தில்அகழ்வுபணிகள்இடம்பெறுகின்றன.

இரண்டாம்கட்டபணிகளுக்காக45நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் 21 நாள் பணிகள் முடிந்துள்ள நிலையில் 101 எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியில் முதல் மற்றும் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் இதுவரையில் மொத்தம் 30 நாட்கள் இடம்பெற்றுள்ளன.

## சீனர்கள் இருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாள்கள் மற்றும் போலி இரத்தினக் கற்கள் என்பவற்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் கீழ் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கஹவத்தபொலிஸ்பிரிவுக்குட்பட்டபகுதியில் வெள்ளிக்கிழமை கஹவத்தை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது சீன நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 100 யுவான் பெறுமதியான 4 ஆயிரம் போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டன. சம்பவத்தில் 28 வயதுடைய சீன நாட்டவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கஹவத்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனிடையே திரிவனகெட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு சுற்றிவளைப்பில் 6 கிலோ 32 கிராம்நிறையுடையபோலிஇரத்தினகற்களுடன் 52 வயதுடைய சீன பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து மடிக்கணினி ஐபேட் மற்றும் கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வரிக் குறைப்புத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வை வரிகளை குறைப்பது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை மேம்படுத்துவதுஇ இந்தக் கலந்துரையாடலின் முதன்மை நோக்கமாகும்.

இந்த இணையவழி கலந்துரையாடலில் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் அமெரிக்க வர்த்தக முகவர் அலுவலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு அமெரிக்கா விதித்துள்ள 30சதவீத தீர்வை வரியைக் குறைப்பது தொடர்பில் ஆளும்தரப்பு அமெரிக்காவுடன் தொடர்ச்சியான பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் அரசுக் கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துரைத்திருந்தார்.

நாடாளுமன்றஉறுப்பினர்கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்குற்றச்சாட்டுஅபத்தமானது. இலங்கை தமிழரசுக் கட்சி அரசுத் தலைவர்க்கு எழுதிய கடிதத்தில் அகழ்வுகள் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது.

தடயவியல் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு தேவையான ஆதரவு அனுசரணையை ஆளும்தரப்பு வழங்கவேண்டும்.

அது ஆளும்தரப்பின் கடமை என்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிபுணர்களை சேர்க்கவேண்டும் என்றும் அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளதாக சிவஞானம் தெரிவித்துள்ளார். மாறாக உள்ளக விசாரணை உள்ளிட்ட எவ்வித விசாரணைகள் தொடர்பிலும் தமது கடிதத்தில் சொல்லப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசவிசாரணைவேண்டாம்என்றோ உள்ளக விசாரணையில் திருப்திப்படுகிறோம் என்றோ குறித்த கடிதத்தில் கூறவில்லை என்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## உள்ளகப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்திநேற்றையதினம்வடக்கு,கிழக்கின் எட்டு மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தினைத் தொடர்ந்து மேற்படி கோரிக்கை உள்ளிட்ட தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் நெருக்கடிகளை உள்ளடக்கிய மனுவில் பலதரப்பட்டவர்களும் கையொப்பமிட்டர். அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்பிற்கு சர்வதேச சுதந்திர நீதிப் பொறிமுறை ஊடாக மட்டுமே எமக்கான நீதியை வேண்டுகின்றோம்.

ஸ்ரீலங்காவின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், நிலத்தை இழந்தவர்கள், வளச்சுரண்டல்களுக்குஉள்ளாக்கப்பட்டவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் கைதிகளின் உறவுகள், சிவில் அமைப்புப் பிரதிநிதிகள், பெண்கள் வலையமைப்புக்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் அடங்கலாக பல்வேறு வகையில் இன அழிப்பிற்குள்ளாக்கப்பட்ட, உள்ளாக்கப்பட்டு வருகின்ற பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டு வருகின்ற வடக்கு கிழக்கிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய 08 மாவட்டங்களிலும் 26 ஜுலை 2025 அன்று நாம் ஒன்று கூடி கவனயீர்ப்பு போராட்டம் ஊடாக எமது ஏகோபித்த கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

இங்கு 'நாங்கள' யாரென்றால்:

(1) வடக்கு கிழக்கின் இராணுவமயமாக்கப்பட்டுள்ள அரச எந்திரத்தின் மிருகத்தனத்தின் கீழ் வாழ்ந்து வரும் தமிழர்கள்; (அரசு கூட, பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு பயங்கரவாதம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதாக அறிவித்தது),

(2)அரசுபுரிந்தசர்வதேசகுற்றங்களிலிருந்து தப்பிப் பிழைத்த உயிருள்ள சாட்சிகள்,

(3) வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், படுகொலை செய்யப்பட்ட மக்களின் உறவினர்கள்,பாலியல்வன்கொடுமைமற்றும் பாலியல்வன்முறையால்பாதிக்கப்பட்டவர்கள், சமூக மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள், சமூதாய மன்றங்களின் உறுப்பினர்கள், பெண்கள் வலையமைப்புக்களின் உறுப்பினர்கள்.

'நாங்கள்' என்பதில் முப்படைகள், அரச திணைக்களங்களான தொல்பொருள் துறை, வனவிலங்குகள், கடலோர பாதுகாப்பு, வனத்துறைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களால் வலுக்கட்டாயமாக பிடிக்கப்பட்டுள்ளதங்களின்தாய்நிலத்திற்காகப் போராடும் மக்கள், தெற்கிலிருந்து வந்த மீனவர்களால் கடற்படை மற்றும் மீன்வளத் துறையின் உதவியுடன் கைப்பற்றப்பட்டுள்ள தங்களின்மூதாதையர்மீன்பிடித்தளங்களை மீட்டெடுக்கப்போராடும்தமிழர்கள் அடங்குவர்.

இறுதியாக 'நாங்கள்' என்பது ஐ.நா. மீதும், சர்வதேச சமூகத்தின் மீதும் இன்றுவரை நம்பிக்கை வைத்திருக்கும் மக்கள்.

குறிப்பாக தமிழ் மக்கள் இலங்கையின் வடக்குகிழக்குமாகாணங்களில்வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு பாரம்பரியமாக தமக்கேயான தனித்துவமான ஆட்சிகளை அமைத்து ஆண்டு வந்த வரலாற்று அடையாளத்துடன் வாழ்ந்தவர்கள். இப்பிராந்தியத்தில் எண்ணிக்கைப் பெரும்பான்மையினரான தமிழ் மக்களுடன் எண்ணிக்கைச் சிறுபான்மையினரான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 1920 களில் தமிழ் அரசியல் பிரதிநிதிகளுடன் செய்த சமத்துவத்திற்கான உடன்பாடுகளை கைவிடத் தொடங்கிய சிங்கள அரசியல் தலைவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எட்டப்பட்ட பல உடன்பாடுகளையும் தீர்வுமுன்மொழிவுகளையும்கைவிட்டுள்ளனர். எங்களை ஏமாற்றியுள்ளனர். பதிலாக இலங்கையின்சிங்களஅரசின்ஒற்றையாட்சிப் பண்பைப் பேணுவதற்காக இராணுவத் தீர்வையே முன்னிறுத்தி வந்தனர். அதனை நடைமுறைப்படுத்த இன அழிப்பைக் கையிலெடுத்துடன், இன்று வரையில் தொடர்கிறனர். இந்த இன அழிப்பானது,

- போராக முன்னெடுக்கப்பட்டபோது ஈழத் தமிழர்கள் வகைதொகையின்றி கூட்டாகவும் தனியாகவும் படுகொலை செய்யப்பட்டனர்.
- தொடர் இடப்பெயர்வு மற்றும் பல வருடகால அகதிமுகாம் வாழ்வை தமிழ் மக்களுக்கு வழங்கியது.
- சிங்கள அரச பொறிமுறை முன்னெடுத்த போரானது தமிழர்களின் இருப்பிடங்களையும், சொத்துக்களையும், வாழ்வாதாரங்களையும் திட்டமிட்ட வகையில் முற்றாக அழித்து தமிழர்களை வக்கற்ற நிலைக்குள்ளாக்கியது.
- பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு பல்லாண்டுகள் விசாரணைகளின்றிச் சிறையிடப்பட்டதுடன் சித்திரவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்.
- பல்லாயிரக்கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர்
- இராணுவமயமாக்கல்இடம்பெற்றதுடன் திட்டமிட்டமுறையிலானநிலஅபகரிப்புக்களும் சிங்களகுடியேற்றங்களும்அதிகரிக்கப்பட்டன.
- அரச பாதுகாப்புப் பொறிமுறையின் திட்டமிட்டமனிதஉரிமைமீறல்கள்காரணமாக பெரும் அச்சுறுத்தலை இன்றுவரையில் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பாதிக்கப்பட்டவர்களும் எதிர்கொண்டு வருகின்றனர்.

அது மாத்திரமின்றி வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்ற சாதாரண மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளில் கூட இலங்கையின் உள்ளகப் பொறிமுறைகள் நீதியை வழங்க மறுத்து வருகின்ற வேளையில் சர்வதேச குற்றங்களை நிகழ்த்திய அரசே அதற்கான நீதியையும் அதே உள்ளகப் பொறிமுறையின் ஊடாகத் தர வேண்டுமெனக் கூறுவது எவ்வாறு சாத்தியமாகும் என்பதைப் பலமுறைநாம்பன்னாட்டுப்பிரதிநிதிகளுக்கும் அமைப்புக்களுக்கும் தெரிவித்திருந்தோம் என்பதனை தங்களுக்கு இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

இலங்கையின் உள்ளக நீதிப்பொறி முறையென்பது என்றைக்கும் நியாமான தீர்வினை ஈழத்தமிழர்களுக்கு வழங்கப் போவதில்லை.

ஆகவேநாங்கள், ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்பிற்கு சர்வதேச சுதந்திர நீதிப் பொறிமுறை ஊடாக மட்டுமே நீதியை வேண்டுகின்றோம் என்றுள்ளது.

## இலங்கையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்தே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ள இங்குள்ள வர்த்தகர் தயாராக இருக்கிறார்கள்.

மேலும் கடந்த காலங்களில் முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்காக நாம் பல தீர்மானங்களை எடுத்தோம். குறுகிய காலப்பகுதிக்குள் அச்சமின்றி இலங்கைக்குள் முதலீடுசெய்வதற்கான வாயப்பை உருவாக்கி கொடுத்துள்ளோம்.

குறிப்பாகஎமதுமுதலீட்டுசபைஇந்தவருடம் பாரியளவிலானமுதலீட்டாளர்களைஅழைத்து வந்துள்ளது. கடந்த 6 மாதங்களில் 500 மில்லியன்ரூபாபெறுமதியானமுதலீடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளோம். அதேபோன்று வடமாகாணத்தில் காங்கேசன்துறை பரந்தன் உள்ளிட்ட 3 முதலீட்டு வலயங்களை புதிதாக ஆரம்பித்துள்ளோம்.

எனவே முதலீட்டாளர்களுக்கு இங்கு வந்து முதலீடு செய்யுமாறு நாம் அழைப்பு விடுக்கிறோம். தற்போது சுற்றுலா அபிவிருத்தி வலயத்தின் ஊடாக 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் திறக்கப்பட்டுள்ளன. உலகமெங்கிலும் உள்ள இலங்கையருக்கு இந்த செய்தியை கூறுங்கள். நாம் பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறோம்.

பல வருடங்களாக அந்நாடுகளில் பில்லியன்இ ரில்லியன் கணக்கிலும் நிதியை ஈட்டிவர்த்தகம்செய்துகொண்டிருப்பவர்களுக்கு தற்போது தாய் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது எனவே அச்சமின்றி எமது நாட்டிற்கு வந்து முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம் என்றார்.

# போதைப் பொருளுடன் சீதுவையில் பெண் கைது

சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள தங்குமிட விடுதி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது விளையாட்டு பொம்மைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது சீதுவை ராஜபக்ஷபுர பகுதியில் நேற்று பொலிஸார் பொலிஸ் சிறப்புப் படை மற்றும் முப்படையினர் இணைந்து மேற்கொண்ட ஒருங்கிணைந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு பிரிவினர் அந்துப் பகுதியில் உள்ள ஒரு தங்குமிட விடுதி தயை சோதனை செய்த போது அறை ஒன்றிலிருந்து குழந்தையுடன் பெண் ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் விளையாட்டு பொம்மையுடன் வெளியேறுவதை அவதானித்துள்ளனர். இதனையடுத்து பொலிஸார் குறித்த பொம்மையை பறிமுதல் செய்து அதனை சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது அதில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் மற்றும் ஹெராயின் போதைப்பொருள் கேரள கஞ்சா மற்றும் சிறிய ரக இலத்திரனியல் தராசு ஆகியவற்றை மீட்டுள்ளனர்.

பெண்ணின் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருள் பொதிகளையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியை சேர்ந்த 29 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து நீர்கொழும்பு பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அசோக தர்மசேனவின் கீழ் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பூட்டான், கசகஸ்தான் தூதர்களுடன் பிரதமர் ஹரினி ராஜதந்திர சந்திப்பு



பூட்டான், கசகஸ்தான் உள்ளிட்ட ஐந்து நாடுகளின் தூதுவர்களுடன் பிராந்திய மற்றும் சர்வதேசப் பங்காளிகளுடனான இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான விசேட இராஜதந்திர சந்திப்பொன்றை பிரதமர் மேற்கொண்டிருந்தார். நாடாளுமன்ற வளாகத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த முக்கியமான இராஜதந்திர சந்திப்புகள் இடம்பெற்றன.

இதன் போது (டாக்காவைத் தளமாகக் கொண்ட) இலங்கைக்கான பூட்டான் தூதுவர் கௌரவ டஷோ கர்மா ஹமு டோர்ஜிஇ (கொழும்பைத் தளமாகக் கொண்ட) இலங்கைக்கான கசகஸ்தான் குடியரசின் தூதுவர் கௌரவ சேர்ஜி விக்டோரோவ்இ (புதுடில்லியைத் தளமாகக் கொண்ட) இலங்கைக்கான ஜோர்தான் தூதுவர் கௌரவ யூசெப் முஸ்தபா அப்தெல்கனிஇ இலங்கைக்கான எித்திரியா நாட்டின் தூதுவர் கௌரவ அலம் வோல்டெமரியம்இ மற்றும் (இஸ்லாமாபாத்தைச் தளமாகக் கொண்ட) இலங்கைக்கான உஸ்பெகிஸ்தான் தூதுவர் கௌரவ அலிஷேர் துக்தயேவ் ஆகியோருடன் இந்தச் சந்திப்புகள் நடைபெற்றன.

இந்த சந்திப்பானது பிராந்திய மற்றும் சர்வதேசப் பங்காளிகளுடனான இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

பிரதமருடனான இந்த கலந்துரையாடலில் அனைத்து தூதுவர்களையும் வரவேற்ற பிரதமர்இ பரஸ்பர நலன்கள்இ நிர்வாகத்தில் ஒத்துழைப்பு இலங்கையின் அபிவிருத்தி மற்றும் ஜனநாயக மாற்றத்திற்கான ஆதரவு ஆகியவற்றில் கவனம் செலுத்தி இந்த கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

ஆடை உற்பத்தி கல்வி கலாசாரப் பரிமாற்றம் ஏற்றுமதி சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுற்றுலாத்துறை விரிவாக்கம் ஆகியவை இந்தக் கலந்துரையாடலின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த வெளிநாட்டு அலுவல்கள்இ வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் பணிப்பாளர் ருவினி முனதாச ஆகியோர் கலந்துகொண்டனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்றம் கேலிக்கூத்தல்ல

இலங்கையின் நாடாளுமன்றம், ஜனநாயகத்தின் உச்ச மேடையாக இருக்க வேண்டிய இடம். மக்களின் நலன் தொடர்பான சட்டங்கள், கொள்கைகள், மற்றும் விவாதங்கள் நடைபெறவேண்டிய இந்த அரங்கம், கடந்த காலங்களில் தொடர்ந்து பரிதாபகரமான முறையில் நடந்துகொள்ளப்பட்டு, மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டது. சிறப்பான பண்பாடும், அரசியல் நாகரிகமும் நாடாளுமன்றத்தின் இயல்பாக இருக்க வேண்டிய நிலையில், அவசர வாதமும், கொரூரமான மொழிப்பயன்பாடும், மற்றும் கேலிக்கூத்தான சம்பவங்களும் பெரும்பாலும் அந்த இடத்தை நிரப்புகின்றன.

2022 ஆம் ஆண்டு 'அரகலய' மக்கள் எழுச்சி, இந்தப் பழைய அரசியல் கலாசாரத்திற்கு மாற்றம் தேவை என்பதை வலியுறுத்தியது. அதன் பேரில், தேசிய மக்கள் சக்தி (N-PP) அரசாங்கமாக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததும், மக்கள் பெரிதும் எதிர்பார்த்தது ஒன்று – நாடாளுமன்றத்தில் ஒரு பண்பான, விவாதத்திற்கு உரிய, சீரான நடைமுறை. ஆனால் அண்மையில் (ஜூலை 23), நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவங்கள், அந்த எதிர்பார்ப்புகளை புலம்பச்செய்யும் விதத்தில் அமைந்தன.

எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், பொதுப் பாதுகாப்பு அமைச்சர் முன்கேள்வியொன்றை (supplementary question) முன்வைக்க முயன்றபோது, அது அதிக நேரம் எடுத்துக் கொண்டதாக கூறி, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலையிட்டார். அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சிப் பிரதிநிதி, 'நீங்கள் வாயை மூடுங்கள்' எனக் கூறியதும், அது பூகம்பமாக வெடித்தது. அதனைத் தொடர்ந்து அரசு மற்றும் எதிர்க்கட்சித் தரப்பினரிடையே அவமதிப்பு மற்றும் சாடல்கள் பரிமாறும் ஓர் அருவருப்பான காட்சி நாடாளுமன்றத்தில் அரங்கேறியது.

இதில் கவலையளிக்கும் ஒன்று – இது ஒரு தவறான பேச்சு வழக்கால் ஆரம்பமான பிரச்சினையாக இருந்தாலும், அதைச் சீர்படுத்துவதற்கான முயற்சி எதுவும் தலைவர்களால் செய்யப்படவில்லை. மேலும், ஆளும் கட்சி உறுப்பினர்களும், சபாநாயகரும் அந்த மோதலை அடக்குவதற்குப் பதிலாக, எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப்போல் செயல்பட்டனர். குறிப்பாக, அவைத் தலைவர் பிமல் ரத்நாயக்க, 'இவர்கள் கொலைகாரர்களின் மகள்கள்', 'இவர்களில் சிலர் தனியார் இடங்களில்மிகுதியானதுன்புறுத்தல்களில்ஈடுபட்டவர்கள்' என, இழிவான, அதிர்ச்சிகரமான குற்றச்சாட்டுக்களை வைத்தார், அவர் அடிக்கடி எப்போதும் இத்தகைய உணர்வெழுச்சியான சொற்பிரயோகங்களையே கையாண்டு வருகிறார். இது ஒரு மோசமான செயல்பாடு.

நாடாளுமன்றத்தில் இடம்பெறும் ஒவ்வொரு நிமிடமும், மக்கள் பணமே செலவழிக்கப்படுகிறது. தேர்தலால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள், நாடு கடும் பொருளாதார நெருக்கடியிலும், சமூக இடர்பாடுகளிலும் சிக்கியுள்ள இக்கால கட்டத்தில், பொதுநலன் சார்ந்த சட்டங்களை முன்வைத்து விவாதிக்க வேண்டிய கடமையுடன் இருக்கிறார்கள். ஆனால், அதன் பதிலாக, வாயாடல், அவமதிப்பு, மற்றும் சுயநல அரசியல்தான் மாறாத சக்கரமாக நாடாளுமன்றத்தில் சுழல்கின்றது.

இங்கே கேள்வி ஒன்றுதான் – இது தான் நீங்கள் பெற்றிருக்கும் ஜனநாயகத்தின் அர்த்தமா? மக்கள் உங்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பியது, இவ்வாறான 'மிக மோசமானன' அரசியலுக்காகவா?

மக்கள் அரசியல் மாற்றத்தை விரும்புகிறார்கள். அவர்கள் இழிவுகளை நோக்கி புது முகங்களை அனுப்பவில்லை. அவர்களின் வரிவிதிப்பில் இருந்து செலவழிக்கப்படும் ஒவ்வொரு ரூபாய்க்கும் நீங்கள் விடைகூற வேண்டியவர்கள். எனவே, நீங்கள் கடமையில் தவறுகிறீர்கள் என்றால், அது சாதாரண தவறல்ல; அது ஒரு நம்பிக்கைத் துரோகம்.

எனவே, இந்த அசிங்க அரசியல் நடத்தைகளை உடனே நிறுத்துங்கள். விவாதங்களை நிரப்பும் ஒழுங்குகள், சட்டங்களை செரிவாக அலசும் பங்களிப்புகள், மற்றும் மக்களுக்கான தீர்வுகளை முன்வைக்கும் முயற்சிகள் மட்டுமே உங்கள் கடமை. நாடாளுமன்றம் ஒரு வாத மேடை அல்ல – அது ஒரு பொது நம்பிக்கையின் நிலையம். அதில் உங்களை நீங்கள் தகுதியுடன் நிரூபிக்கவில்லைஎன்றால், அந்தநம்பிக்கையைஇழக்கவைக்கும் முடிவுகளுக்கு நீங்கள் தயாராக இருக்கவேண்டும்.

# போதையில் மாதா சுருவத்தை உடைத்தெறிந்த குற்றச்சாட்டில் ஆளும்கட்சி அமைப்பாளர் கைது

## மெரிஞ்சிமுனையில் சம்பவம்





மெரிஞ்சிமுனை நாரயம்பதி மாதா சுருவத்தை மதுபோதையில் உடைத்தெறிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஆளும் என்பிபி கட்சியின் தீவிர அமைப்பாளர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் தீவக அமைப்பாளர் வேல்முருகன் மயூரன் கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமானவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மாதா சுருவம் உடைக்கப்பட்டபோது அவருடன் சேர்ந்து 20 பேர் அங்கு போதையில் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுருவம் உடைக்கப்பட்டது குறித்து ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்திருந்த நிலையில் பொலிசார் துரித நடவடிக்கையில் இறங்கி 8 பேரைக் கைதுசெய்தனர். ஏனையோர் கைதானவர்களின் தகவலின் அடிப்படையில் தேடப்பட்டு வருகின்றனர். அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மயூரன் உள்ளடங்கலாக 20 பேர் அடங்கிய குழுவினர் வெள்ளிக்கிழமை ஆலயப் பகுதியில் இருந்து மது அருந்தினர் எனவும் அங்கு வருகை தந்த சுற்றுலாவிகளுடனும் தகாத வார்தைகளில் பேசி அவரகள் முரண்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே அவர்கள் மாதா சுருவத்தை உடைத்தெறிந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 50 இலட்சம் பெறுமதியான மாதா சுருவத்தையே அவர்கள் அடித்து உடைத்து சேதமாக்கிவிட்டுச் சென்றுள்ளனர் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

கிருஸ்துவ ஆலயத்தின் சுருவத்தை இந்து சமயத்தை சேர்ந்த தரப்பினர் உடைத்ததாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் பொலிசார் நிலைமையை கருத்தில் கொண்டு துரித நடவடிக்கையில் ஈடுபட்டதன் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

# தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று

1983ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கியஸ்தர்களின் 42ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அரங்கில் நடந்த நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து, நடராசா தங்கவேல் (தங்கத்துரை), செல்வராசா யோகச்சந்திரன்(குட்டிமணி), கணேசானந்தன் ஜெகநாதன்(ஜெகன்) செல்லத்துரை சிவசுப்பிரமணியம் (தேவன்) ஆகியோரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், சமத்தவக் கட்சியின் பொதுச் செயலாளர் சந்திரகுமார், புளொட் பிரமுகர் கஜதீபன், யாழ். மாநகர சபை முதல்வர் மதிவதனி, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
சாவகச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## வடக்கு கிழக்கின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்விலும் பங்கேற்றிருந்தனர்.

### கொழும்பு

வடக்கு கிழக்கில் இடம்பெறும் போராட்டங்களுக்கு ஆதரவாக ‘மாண்புமிகு மலையக மக்கள் சிவில் சமூகக் கூட்டிணைவு‘ அமைப்பினர் கொழும்பு ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தின் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் செம்மணி மனிதப்புதைகுழிக்கு நீதி கோரும் வகையில் குழந்தை பொம்மை, பாடசாலை புத்தகைப் பைகள்என்பவற்றையும்காட்சிப்படுத்தியதோடு சர்வதேச நீதிக் கோரிக்கையை வலியுறுத்தும் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதில், மலையக சிவில் சமூகப் பிரதிநிதிகள், தென்னிலங்கை முற்போக்கு சிங்கள சிவில் சமூகத்தரப்பினர், மதத்தலைவர்கள் உள்ளிட்டவர்கள்பலவரும்பங்கேற்றிருந்தனர்.

### யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்துக்கான போராட்டமானது, செம்மணிப் புதைகுழிக்கு அண்மித்த நல்லூர் வீதி வளைவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காணாமலாக்கப்பட்டவர்களின் புகைப்படங்களை தாங்கியவாறும், சர்வதேச நீதிக் கோரிக்கைக்கான பதாகைகளை ஏந்தியவாறும் இனப்படுகொலைக்கு நீதி வேண்டும் என்று கோசமிட்டனர்.

இந்தப் போராட்டத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்பொதுச்செயலாளர்கஜேந்திரன், வலிகாமம்கிழக்குபிரதேசசபையின்தவிசாளர் நிரோஷ்,குரல்அற்றவர்களின்குரல்அமைப்பின் செயற்பாட்டாளர் கோமகன், காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள், சமூக மட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### கிளிநொச்சி

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவயோகநாதன் உள்ளிட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், பொதுமக்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.

### வவுனியா

வவுனியா புதியபேருந்து நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் வடக்கு,கிழக்குவலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள், சமூக செயற்ப்பாட்டாளர்கள், தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் கலந்துகொண்டிருந்தன.

பங்கேற்றவர்கள் மனித குலத்திற்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானத்தை வலுப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினர். அதனையடுத்து சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி கையெழுத்தும் திரட்டப்பட்டது.

### முல்லைத்தீவு

நீண்ட காலமாக தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்பிற்கு சர்வதேச நீதி கோரிய போராட்டமானது, முல்லைத்தீவில் மாவட்ட செயலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தபிசாளர் லோகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஜூட்சன், வடக்கு - கிழக்கு சமூக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அன்புமணி லவகுசராசா, மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

### திருகோணமலை

திருகோணமலைசிவன்கோவில்முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் இலங்கையின் உள்ளக நீதிப்பொறிமுறையென்பது என்றைக்கும் நியாமான தீர்வினை வழங்கப்போவதில்லைஎன்பதால்எங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்பிற்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடான நீதியே அவசியமாகும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதில் பாதிக்கப்பட்ட மக்கள், சமூக மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள், சமூதாய மன்றங்களின் உறுப்பினர்கள், பெண்கள் வலையமைப்புக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு ‘தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதி வேண்டும்‘ என்ற வாசகம் அடங்கிய பதாதைகளை ஏந்தியும் கோசங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன்இறுதியில்ஒன்பதுகோரிக்கைகள் அடங்கிய மனுவில் கையெழுத்திட்டனர்.

### மட்டக்களப்பு

இன அழிப்பிற்கு சர்வதேச நீதி கோரி மட்டக்களப்பில் காந்தி பூங்கா முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத் ஆகியோரும், மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம் பாக்கியநாதன் உள்ளிட்ட அரசியல்பிரமுகர்களும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பதாதையினை ஏந்தியவாறு நீதி கோரிய கோசங்களை எழுப்பினர். பின்னர் சர்வதேசத்துக்கான மனுவில் தமது கையொப்பங்களைப் பதிவுசெய்தனர்.

## வீசா விலக்களிக்கப்பட்ட நாடுகள் பட்டியல் தயார்

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக, ஆளும்தரப்பு நாற்பது நாடுகளுக்கு விசா கட்டண விலக்களிப்பதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கமைய வீசா கட்டண விலக்களிப்பு வழங்கப்படும் நாடுகள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

பிரித்தானியா, ஜேர்மன், நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், அவுஸ்திரேலியா, போலந்து, கசகஸ்தான், சவுதி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நேபாளம், சீனா, இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, தாய்லாந்து, மலாயா, ஜப்பான், பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, கிசெச், இதாலி, பெலாரஸ், ஈரான், சுவீடன், பின்லாந்து, டென்மார்க், கொரியா, கட்டார், ஓமான், பஹரைன், நியூசிலாந்து, குவைத், நோர்வே, துருக்கி மற்றும் பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளுக்கே இவ்வாறு வீசா கட்டண விளக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

விசா கொள்கையில் ஏற்பட்ட இந்த திடீர் மாற்றம் இலங்கையின் சுற்றுலா மீட்சியை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விசா கொள்கை மாற்றம் கலாசார பரிமாற்றத்தை அதிகரிக்க சர்வதேச பார்வையாளர்களை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது.

இது அதன் சர்வதேச நிலையை மேம்படுத்தவும், பயணிகளுக்கு எளிதான அணுகலை உருவாக்கவும், சுற்றுலா மற்றும் சர்வதேச உறவுகளை அதிகரிக்கவும் நாட்டின் முயற்சிகளை பிரதிபலிக்கின்றது.

## பாதுகாப்பு அமைச்சிற்கு புதிய ஊடகப் பேச்சாளர்

பாதுகாப்பு அமைச்சின் புதிய ஊடகப் பணிப்பாளர் மற்றும் பேச்சாளராக பிரிகேடியர் பிராங்கிளின் ஜோசப் உத்தியோக பூர்வமாக கடமைகளை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த அமைச்சின் ஊடகப்பணிப்பாளர் மற்றும் பேச்சாளராக் பணியாற்றிய கேர்ணல் நளின் ஹேரத் அப்பதவியிலிருந்து விடைபெற்றுள்ள நிலையிலேயே அவ்வெற்றிடத்துக்கு பிரிகேடியர் பிராங்கிளின் ஜோசப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவ பொறியியலாளர் படையணியின் மூத்த அதிகாரியான பிரிகேடியர் பிராங்கிளின் ஜோசப் தொழில்முறை, தலைமைத்துவம் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கான ஆழ்ந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றால் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான சிறந்த சேவையை ஆற்றியுள்ளார்.

அத்துடன்இ இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக, இலங்கை பொறியியலாளர் படையணியின் தளபதியாக செயற்பட்டிருந்தார்.



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.07.2025இல் வெளியிடப்பெற்றது